World Tamil Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# எபேசியர் (3)

## **1.** எமது அடையாளம் **(b)** பரிசுத்தவான் (புனிதன்)

நான் பரிசுத்தவான் என்று சொன்னபொழுது உங்கள் மனதில் என்ன தோன்றியது?
நீங்கள் உங்களை எப்படி பார்க்கிறீர்கள்? நீங்கள் உங்களைகடவுளின் கிருபையால் மன்னிக்கப்பட்ட பாவியாக பார்க்கிறீர்களா? அல்லது பரிசுத்தவானாகப் பார்க்கிறீர்களா?



உங்களைப்பற்றி வேதவசனம் என்ன சொல்கிறது?

நீங்கள் உங்களைப் பாவியென்று குறிப்பிடுவது, இளவரசர் வில்லியமும் ஹறியும் தங்களை வீதியோரங்களில் வசிக்கும் பிச்சைக்காரரென்று கூப்பிடுவதற்கு சமமானதாகும். இது அபத்தமானது!! அவர்கள் யார் எங்கிருந்து வந்தவர்களென்பது எல்லோருக்கும் தெரியும்.
பெரும்பாலான கிறிஸ்தவர்களின் இன்றைய பிரச்சினையும் இதுதான்!

கொரிந்து சபையைச் சேர்ந்த பலர் தகாத உறவுகளில் ஈடுபட்டவர்களாயிருந்தும், அப்போஸ்தலர் பவுல் அவர்களை

“பரிசுத்தவான்கள்” என்றே அழைக்கிறார்: மன்னிக்கப்பட்ட பாவிகளென்றல்ல.
தேவனின் வார்த்தையிது – எமது பாவமுள்ள மனிதன் மரித்து (ரோமர் 6:11) கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டு (ரோமர் 6:2,4) அப்போது கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய சிருஷ்டிகளாக மாறியுள்ளோம் (2 கொரிந்தியர் 5:17).

## பாவிகள்

புதிய ஏற்பாட்டில் பாவிகளென்பது கிரேக்க மொழியில் “*hamartolos*” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அர்த்தமாவது:
பாவத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டவன் - பாவி

a) பாவத்திலிருந்து விடுதலையில்லை
b) ஒப்புயர்வற்ற பாவி, பழிபாவத்துக்கஞ்சாதவன்

2) எல்லோரும் ஒழுக்கக் கேடுள்ளவர்கள்

3) குறிப்பாக பாவக்கறை படிந்த மனிதன்
a) வரி வசூலிப்பவன், பிற சமயத்தவன்

மன்னிக்கப்பட்ட பாவியென்பவன், பாவங்கள் மன்னிக்கப்பட்டிருப்பினும் இன்னும் அதன் கட்டுக்களிலிருந்து விடுபடாதவன் என்பதையே மேற்கூறிய விளக்கங்கள் உணர்த்துகின்றன.

யோவான் 8:31-36ல் அறியாமையினால் இன்னும் பாவத்தின் பிடிக்குள் சிக்கியிருக்கும் மனிதனைப்பற்றி குறிப்பிடுகின்றார்.

வசனம் 36ல் *ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்* என்று இயேசு சொல்லுகிறார்.

நாமெல்லோரும் சட்டத்தின்படி பாவத்திலிந்து விடுதலைபெற்றவர்கள்: ஆனாலும் எமது அறியாமையினால் இன்னும் பாவக்கட்டுக்குள் சிக்குண்டுள்ளவர்களாய் வாழ்கிறோம்.

## பரிசுத்தவான்

பரிசுத்தவானெனும் வார்த்தை கிரேக்க வார்த்தையான "hagious" என்பதிலிருந்து உருவானது. அதாவது கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட, தெய்வீகமான, புனிதமான, பயக்தியுள்ள என்று அர்த்தமாகும்.

புதிய ஏற்பாட்டில் இது எப்பொழுதும் பன்மையிலேயே குறிப்பிடப்படுகின்றது.

(அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 9:13) *ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்.*

(அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 9:32) *பேதுரு போய் எல்லாரையும் சந்தித்துவருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்.*

(அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 26:10) *அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்…….*

பிலிப்பியர் 4:21ல் மாத்திரமே ஆங்கில வேதாகமத்தில் ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகமத்தில் 68முறை பரிசுத்தவான்களெனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தேவ மக்களென்பது பலவிதங்களில் குறிப்பிடப்படுகின்றது

*தெரிந்துகொள்ளப்பட்ட* (1 பேதுரு 1:2)
*பிரியமுள்ள சகோதரர்களுக்கு* (கொலோசேயர் 1:2)
*சகோதரரே....* (1 யோவான் 2:7)

*தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்* (1 யோவான் 3:2) *அவருக்குச் சொந்தமான ஜனமாயும்* (1 பேதுரு 2:9) எல்லாவற்றுக்கும் மேலாக “பரிசுத்தவான்கள்” என்று அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு, எதுவாயுமிருக்கலாம் - ஆனால் “பாவிகளல்ல”.. இன்னும் எபேசியர் முதலாவது அத்தியாயத்தில் பவுலானவர் “பரிசுத்தவான்கள்” என்னும் வார்த்தையை மூன்றுமுறை உபயோகிக்கின்றார். அத்துடன் நாம் உடம்பின் ஒரு பகுதி - இணைந்திருக்கும் கூட்டம் பரிசுத்தவான்களாகும்.

## ஒருவன் எவ்வாறு பரிசுத்தவானாக முடியும்?

இப்பொழுதும் கத்தோலிக்க சபையில் கீழ்க்கண்டமுறை அனுசரிக்கப்படுகிறது. ஒருவரைப் புனிதவானாக ஆலோசிப்பதற்கு, குறைந்தது 5 வருடங்களுக்கு முன்பாக அவன்/அவள் இறந்திருக்கவேண்டும். (பாப்பாண்டவர் இரண்டாவது யோவான் அருளப்பர், அன்னை தெரேசாவின் விடயத்தில் மட்டும் இந்தத் தேவையை சிறிது தளர்த்தியிருந்தார்).

முதல் படி: ஒருவரை புனிதவானாக ஆலோசிப்பதற்கு முன்பு அவருடைய வாழ்க்கையைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு ஆயர் நியமிக்கப்படுவார். அவ்வேட்பாளர் அடுத்த கட்டத்துக்குத் தகுதியானவரென்றுக் கருதப்பட்டால் வத்திக்கான் “Nihil Obstat” என்பதையளிக்கும். அதாவது லத்தீன் பாஷையில் “எதுவும் தடையில்லை” என்று அர்த்தமாகும். இதன்பின் அவ்வேட்பாளர் “தேவ மனிதன்” என்று அழைக்கப்படுவார்.

இரண்டாவது படி: ஆலய அதிகாரி, கோரிக்கையாளர், செய்முறையை ஒருங்கிணைக்கும் வழக்களிஞராக செயற்படுபவர், அந்த வேட்பாளர் ஒரு வீரம் மிகுந்த நல்லொழுக்கமான வாழ்க்கை வாழ்ந்தாரென நிரூபிக்க வேண்டும். இது ரோமிலுள்ள Causes of Saints அளிக்கப்பட்ட ஆவணங்கள் மூலமாகவும், வாக்குமூலங்கள் மூலமுமே தீர்மானிக்கப்படும். ஒரு வேட்பாளர் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பின்பு, அவருக்கு “Venerable” எனும் உயர்பட்டமளிக்கப்படும்.

மூன்றாவது படி: "ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று முன்னறிவிக்கவும், தெரிந்துகொள்ளவும், அவருடைய வீரம் மிகுந்த நல்லொழுக்கமான வாழ்க்கையோடு, அவரது நாமத்தின் இடைபாட்டின்மூலம் ஏதாவதொரு அற்புதமும் நிகழ்ந்திருக்க வேண்டும் (அல்லது கிறிஸ்தவ மதத்தின் பெயரால் உயிரிழந்திருக்க வேண்டும்).

நான்காவது படி: முன்னறிவித்த பின்பு இரண்டாவது அற்புதம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் பாப்பாண்டவர் இத்தேவைகளைத் தளர்த்த முடியும். (முன்னறிவுப்புக்கு முன்பு ஒரு அற்புதம் நிகழாவிடினும் பரவாயில்லை. கட்டாயமாக முன்னறிவுக்குப் பின்பு ஒரு அற்புதம் நிகழ்ந்தேயாக வேண்டும்). வேட்பாளரின் இடைப்படல் மூலமாக இரண்டாவது புதுமை நிகழ்ந்தவுடன், பாப்பாண்டவர் அவரை "புனிதர்" என்று தெரிவிப்பார். (உபயம் - *Catholic Doors*)

## இம்முறைகளிலுள்ள குளறுபடிகள்

நிறையபேர் - கத்தோலிக்கர் மட்டுமல்லாது கிறிஸ்துவர்களுங்கூட – தங்களுக்ககப் பிரார்த்திக்குமாறு மற்றவர்களை வேண்டிக்கொள்கிறார்கள்: காரணம் - அவர்கள் தங்களைப் பரிசுத்தவான்களாகவோ, தகுதியுள்ளவர்களாகவோ எண்ணாதிருப்பதுதான். ஆனால் உங்களுக்கும் எனக்கும் இயேசுக்கிறிஸ்துவைத் தவிர வேறொரு இடைத்தரகரில்லை – அவர் மட்டுமே ஒரேயொரு மத்தியஸ்தரென்பதைத் தெரிந்கொள்ள வேண்டும். 1 திமோத்தேயு 2:5 - *தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.*

எபிரேயர் 4வது அத்தியாயத்தில் - எம்மைப்போல் சோதனைக்குட்பட்டும் பாவஞ்செய்யாத பிரதான குருக்கள் நமக்குண்டென்றும், ஆதலால் எமது தேவைகளின்போது அவரது கிருபையெனும் சிம்மாசனத்தின்மூலம் நாம் கிருபையும், தயவும் பெற்றுக்கொள்ளலாமென்று – தெட்டத் தெளிவாக உள்ளது. தயவுசெய்து அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 4:12ஐயும், எபிரேயர் 7:25 & 9:25ஐயும் படிக்கவும்.

நீங்கள் எப்படி உங்களை அடையாளப்படுத்துவீர்கள்?




பொதுவாக கிறிஸ்தவ வட்டாரத்தில் “நான் கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவி” அல்லது “நான் கடவுளின் கிருபையால் மன்னிக்கப்பட்ட பாவி” என்று சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருந்தால் இந்த அறிக்கைகள் சரியானவைதான். தயவுசெய்து என்னைத் தப்பாக புரிந்துகொள்ள வேண்டாம். ஆனால் நாம் எம்மைத் தப்பாக அடையாளப்படுத்திக் கொள்வதாக நான் நம்புகிறேன். அது எமது அறிவு குறைவினாலா அல்லது தப்பான தாழ்ச்சியினாலா என்று எனக்குப் புரியவில்லை. ஆம், இரத்தத்தால் வாங்கப்பட்ட தேவ பிள்ளைகளாகிய நாங்கள், கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள்தான். ஆனால் கடவுளோ வேதாகமமோ எம்மைப் பாவிகளாகக் கருதுவதில்லை .

இதில் என்ன இருக்கிறது? கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் நாமென்று சொல்வதன்மூலம், நாம் இயேசுவின் தியாகத்தை மலிவாக்குகின்றோம். அத்துடன் எம்மை பாவிகளென்று அழைப்பது இயேசுவினதும், பவுலினதும் கட்டளைகளுக்கு எதிரானதாகும். சபையினர் பாவங்களை நிறுத்த வேண்டுமென்று அவர்கள் சொல்கின்றனர்.

பாவஞ்செய்தல் என்னையும் உங்களையும்போன்ற இரட்சிக்கப்பட்ட மக்களுக்குரியதல்ல. பாவமான மாமிசத்தாலும் சாத்தானாலுண்டாகும் உணர்ச்சிகளுக்கு சுலபமாக ஆளாவதாலும் நாம் பாவஞ்செய்கின்றோம்.

பாவியென்பது எமது பழைய இயல்பாகும். நாம் இன்னும் பாவிகளென்றால் - நாம் அவரது சாயலிலிருப்பதால் - தேவனும் ஒரு பாவியா?

முழுக்கு ஞானஸ்நானம் எமது புதிய வாழ்க்கைக்கு ஒரு நல்ல உதாரணம். நாம் தண்ணீரில் மூழ்கும்போது இயேசுக்கிறிஸ்துவின் இறப்புடன் ஒப்பிடப்படுகின்றோம். நீரிலிருந்து வெளியே வருகையில் எப்படி பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை சாவிலிருந்து உயிர்ப்பித்தாரோ அவ்வாறே நம்மையும் மகனின் சாயலில் ஒரு புதிய வாழ்க்கைக்கு உயிர்ப்பிக்கிறார். நீங்கள் இப்பாழுது ஒரு புதிய சிருஷ்டி.

2 கொரிந்தியர் 5:17 - *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

ஆகவே நீங்கள் இப்பொழுது பாவியல்ல – பரிசுத்தவான்!

## பாவமும் மீட்பும்

இவ்வுலகத்தின் பழைய பாவத்தைப் பார்ப்போம். ஏவாள் ஏமாற்றப்பட்டு ஆதாம் பாவஞ்செய்தபோது இவ்வுலகத்தில் பாவம் பிறந்தது. ஒரு கீழ்ப்படியாமையினாலே எல்லார்மேலும் பாவம் வந்தது (ரோமர் 5:12). பழைய ஏற்பாட்டில் இரத்தப்பலி செலுத்துவதன்மூலம் பாவத்துக்குரிய தண்டனை ஒரு வருட காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் அவர்களது மனசாட்சி ஒருபொழுதும் துப்புரவாக்கப்படவில்லை. எபிரேயர் 10:1-10ஐ வாசிக்கவும்.

எபிரேயர் 10:3-4 *அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது.*

*அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே.*

இவ்வகையில் அவர்களது மனசாட்சி கழுவப்படவில்லை. ஆனாலும் தேவன் அவர்களை வேறுவிதமாகப் பார்க்கின்றார்.பழைய உடன்படிக்கையின்படி எண்ணாகமம் 23:21 - *அவர் யாக்கோபிலே*

*அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை.*

இங்கு தேவன் அக்கிரமங்களையோ, பாவங்களையோ காண்கிறதில்லை என்று சொல்லப்படுகின்றதே தவிர, பாவங்களும் குற்றங்களுமில்லையென்று தேவன் சொன்னதாக இல்லை.
புதிய உடன்படிக்கையில் இயேசுவின் இரத்தத்தினால் எமது பாவங்கள் கழுவப்பட்டன என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. எபேசியர் 1:7 - *அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே,* ***இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு*** *இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*
மத்தேயு 26:28 - *இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற* ***புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.***
ஆகவே எமது பாவங்களுக்குரிய மன்னிப்பு கல்வாரி சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவன் இரத்தத்தினாலேயே கிடைக்கின்றது.

எபிரேயர் 8:12 - *ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும்* ***இனி நினையாமலிருப்பேன்*** *என்று* ***கர்த்தர்*** *சொல்லுகிறார்.* அவ்வாறே தேவன் உங்களை ஒரு பாவியாகப் பார்ப்பதில்லை: உங்களது பாவங்ளைப் பார்க்க அவர் விரும்புவதுமில்லை.

பழைய ஏற்பாட்டில் பாவஞ்செய்தவன் தனது பாவப்பலியாகிய பலியாட்டைக் கொண்டுவருகிறான் - ஆசாரியன் அதில் ஏதும் குறைகள் இருக்கின்றனவா என்று சோதிக்கின்றார். அவர் பாவியை சோதிப்பதில்லை. அதன்பின் ஆசாரியர் அப்பலியாட்டின் தலைமேல் கைவைக்குமாறு பாவியைக் கேட்கின்றார். அதன் அர்த்தமாவது, மனிதனின் பாவங்கள் பலியாட்டுக்குட்டிக்கும், ஆட்டின் களங்கமின்மை பாவிக்கும் மாற்றப்படுகின்றன.

புதிய ஏற்பாட்டில், நாம் ஆட்டுக்குட்டியோ புறாவோ எமது பாவங்களுக்குப் பலியாகக் கொண்டுபோவதில்லை. ஆனால் தேவனிடத்தில் இயேசுக்கிறிஸ்துவின் பலியை நம்பி வருகின்றோம்.

2 கொரிந்தியர் 5:21 - *நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*
கொலோசேயர் 1:14 - (*குமாரனாகிய) அவருக்குள்,* ***அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.***

இப்படியே நீங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு உங்களது பயணத்தைத் தொடர்ந்து வருகையில் பரிசுத்தமாக்குதல் ஆரம்பிக்கின்றது.

பரித்தமாக்குதல்
பரிசுத்தமாக்கலின் அர்த்தம் ‘‘ஒழுங்காக இயங்கும் நிலை’’. உதாரணமாக ஒரு பேனா ஒழுங்காக எழுதும்போது அத பரிசுத்தமாக்கப்படுகின்றது; ஒரு வண்டி பயணிகளை ஏற்றிச் செல்லும்பொழுது….. இவ்வாறே நீங்களும் நானும் கர்த்தரின் நோக்கத்துக்காக பயன்படும்பொழுது, நாம் பரிசுத்தமாக்கப்படுகின்றோம். மனிதரால் தம்மைத்தாமே பரிசுத்தமாக்க முடியாது. அது தேவனின் வேலையாகும். தேவனானவர் (1 கொரிந்தியர் 1:30) பரிசுத்த ஆவியினாலும் (2 தெசலோனேக்கியர் 2:13 1 பேதுரு 1:2) தேவனின் வார்த்தையாலும் (யோவான் 17:17) இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலும் (1 கொரிந்தியர் 6:11) நம்மைப் பரிசுத்தமாக்குகின்றார்.

பரிசுத்தமாக்குதலும் நியாயப்படுத்தலும் பல விதங்களில் வேறுபடுகின்றன. நியாயப்படுத்தலென்பது இயேசுவின் சிலுவை மரணத்தின்மூலம் தேவன் நம்மைக் ‘‘குற்றமற்றவன்’’ என்று ஒரேதரம் அறிக்கைசெய்வதாகும். பரிசுத்தமாக்குதல் என்பது – ஒருவனுடைய வாழ்க்கையில் நியாயப்படுத்துதலில் ஆரம்பித்து தொடர்ந்து நிகழும் ஒரு செயலாகும். ஒருவனுடைய வாழ்க்கையின் ஆரம்பப் புள்ளி நியாயப்படுத்துதலாகும்; பரிசுத்தமாக்குதல் அதைத் தொடர்ந்து நிகழும்.

படைப்பின் ஆரம்பத்தில் தேவன் மனிதனை மாசற்றவனாகவே (பரிசுத்தமுள்ளவனாக) உருவாக்கினார். ஆதாமினதும் வோளினதும் வீழ்ச்சிக்கு முன்பாக எல்லாரே ஒழுங்காக இயங்கின. இவ்வீழ்ச்சியானது பூமியையும் எல்லா உயிரினங்களையும் செயலற்றதாக்கியது. விழுந்த மனிதர் இன்னுமே தேவனின் சாயலுக்கொத்தவர்களாக இருக்கின்றனர் (யாக்கோபு 3:9-10). வீழ்ந்த மனிதர் இப்போதும் தேவனுடைய படைப்புக்கும் இயல்புக்கும் சாட்சியாக இருக்கின்றனர் (சங்கீதம் 19:1-6 ரோமர் 1:20). இருந்தும் அவர்கள் செயலற்றவர்களாயும் பரிசுத்தமற்றவர்களாயும் இருக்கிறார்கள். ஆகையால் எல்லாம் சரியாகும்வரை அனைத்து

சிருஷ்டிகளும் பரிசுத்தமாக்குதலுக்காக தவிக்கின்றன (ரோமர் 8:21-22 வெளிப்பாடுகள் 20-21

தேவன் இதையே விரும்புகிறாரென்பதை வேதவசனம் எமக்குத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

1 தெசலோனேக்கியர் 4:3 ***நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.***

அப்படியானால் தேவன் உங்களை இன்று எவ்வாறு நோக்குகின்றார்?

நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்கையில், உங்களது பரிசுத்தமாக்குதல் ஆரம்பமாகின்றது. இயேசுவின் இரண்டாவது வருகையின்போது அவரை முகத்துக்கு முகம் பார்க்கையில் அல்லது நாம் இவ்வுலகைவிட்டு விலகுகையிலேயே, பரிசுத்தமாக்குதலின் தொடர்ச்சியான நிகழ்ச்சி முடிவுக்கு வருகின்றது.

பிலிப்பியர் 1:6, 2:12-13, 1 யோவான் 3:2-3 என்பன தெளிவான விளக்கத்தைத் தருகின்றன:

- முதலாவது கடந்த காலத்தின் நன்மையான காரியங்கள் தற்போதும் தொடர்கின்றன. தேவன் எம்மில் ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கியுள்ளார். நாம் தற்போது அவரது அன்பான பிள்ளைகள்.

- இரண்டாவது நாம் தேவனுக்கடுத்த காரியங்களைச் செய்யும்பொருட்டு அவர் தொடர்ந்து எம்மில் வேலைசெய்கின்றார்.

- மூன்றாவது இந்த வேலை இன்னும் முடிவடையவில்லை. நாம் எப்படியாவோமென்பது இன்னும் வெளிப்படவில்லை.

- நான்காவது வருங்காலத்தில் தேவன் தான் தொடர்ந்ததை முடிப்பார். இயேசுக்கிறிஸ்துவின் நாளில் அவர் அதை முடிப்பார். அவர் காட்சியளிக்கும்போது நாம் அவரைப்போல உருமாறி அவரை அவராகப் பார்ப்போம்.

நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமாக்கப்படுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அவரைப்போல உருமாறுவீரகளென்பது நிச்சயம். தேவன் பரிசுத்த ஆவியினூடாக உங்களை அவரைப்போல் உருமாற்றுவார்.

அதேவேளையில் தேவன் உங்களை இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட தன்னுடைய மகனாகிய பரிசுத்தவானைப்போலவே பார்க்கின்றார்.

1 யோவான் 4:17 - *நியாயத்தீர்ப்புநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறத். ஏனென்றால், அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.*

இயேசு இப்பொழுது இருப்பதுபோலவே நாமும் இப்போது இருக்கின்றோம். இயேசு இப்பொழுது எப்படியிருக்கிறார்? தேவனின் வலதுபாரிசத்தில் பரிசுத்தமுடனும் மகிமையுடனுமிருக்கின்றார். நாம் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நியாயப்படுத்தப்பட்டு, அவரது அன்பான மகனின் சாயலில் தொடர்ந்தும் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமென்பதே தேவனின் நோக்கமாகும்.

அதனாலேயே வேதாகமம் உங்களையும் என்னையும் பரிசுத்தவானென்று அழைக்கின்றது.

பவுலானவர் எபேசுசபை மக்களைப் பரிசுத்தவான்களென்று அழைப்பதில் ஆச்சரியமேதுமில்லை! எபேசுசபையினரை மட்டுமல்ல, கொரிந்து சபையினரையும் அவ்வாறே அழைக்கின்றார்.

தேவன் உங்களைக் காண்பதுபோல நீங்கள் உங்களைக் காண்கின்றீர்களா?

தேவன் உங்களை அழைப்பதுபோல நீங்கள் உங்களைக் அழைக்கின்றீர்களா?

தேவன் உங்களைக் காண்பதுபோல நீங்கள் உங்களைக் காண்கின்றீர்களா?

அவர் பரிசுத்தமாயிருப்பதால் நீங்களும் பரிசுத்த வாழ்க்கை வாழ்கின்றீர்களா?

முறையான விசுவாசம் முறையான வாழ்க்கை வாழ உதவும். நீதிமொழிகள் 23:7 *அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.*

பரிசுத்தவானே தேவனுடைய குடும்பத்துக்குள் உம்மை வரவேற்கின்றோம்.

பாவிக்கும் பரிசுத்தவானுக்குமிடையிலுள்ள மிகப்பெரிய வித்தியாசம் -

## ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு இறந்த காலமுண்டு

## ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு எதிர்காலமுண்டு